தமிழ் முரசு

# அர்ச்சனை சீட்டுகளை வழங்கும் தானியங்கி இயந்திரம்

கி.சுபத்திரா

உலகிலேயே முதன்முதலாக, நாளை முதல் சிராங்கூன் சாலையில் உள்ள வீரமாகாளியம்மன் கோவிலில் பக்தர்கள் தங்களுக்குத் தேவையான அர்ச்சனை சீட்டுகளையும், இதர பொருட்களையும் கோவில் வளாகத்தில் அமைந்துள்ள தானியங்கி இயந்திரத்தில் சிறப்பு அட்டையை பயன்படுத்தி வாங்கிக் கொள்ளலாம்.

"பக்தர்கள் வரிசையில் நிற்பதைக் குறைக்கவே ஸ்ரீ–விஎம்டி (SRI–VMT) என்ற இந்தத் தானியங்கி இயந்திரத்தை அறிமுகப்படுத்தியுள்ளோம். எங்களிடம் நேரடியாக இந்த அட்டையை ஐந்து வெள்ளி வைப்புத்தொகையைச் செலுத்தி இந்த அட்டையை பெற்று கொள்ளலாம். அதன் பின் அலுவலகத்திற்குச் சென்று அட்டையின் மதிப்பீட்டை ஏற்றிக் கொள்ளலாம்," என்று கோவிலின் நிர்வாகக் குழு உறுப்பினரான திரு செல்வகுமார் கூறினார்.

தானியங்கி இயந்திரத்தைப் பயன்படுத்தும் பக்தர்கள் அலுவலகத்திற்குச் செல்லாமல் ரசீதைப் பெற்றுக் கொண்டு நேராக சந்நிதிக்குப் போகலாம்.

"இப்போதைய காலகட்டத்தில் 90 விழுக்காட்டிற்கும் அதிகமானோர் கணினியைச் சுலபமாகப் பயன்படுத்துகிறார்கள். இந்த இயந்திரத்தைப் பயன் படுத்துவதன் மூலம் அர்சசனை சீட்டு வாங்கும் நேரமும் வெகுவாகக் குறைகிறது. பால், நெய் விளக்கு, தேங்காய் போன்ற பொருட்களையும் பக்தர்கள் வாங்கிக் கொள்ளலாம்," என்ற திரு குமார், பக்தர்கள் அவசரப்படாமல் நிதானமாக இயந்திரத்தைப் பயன்படுத்தலாம் என்றும் தெரிவித்தார்.



வீரமாகாளியம்மன் கோவிலில் அர்ச்சனை சீட்டுகளை வழங்கும் தானியங்கி இயந்திரம் ஸ்ரீ–விஎம்டி. படம்: அருண் ராமு